# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)

VANIYAMBADI

**PG RESEARCH DEPARTMENT OF TAMIL**

**I M.A. TAMIL – SEMESTER – II**

| | |
|---|---|
| **Core Course -1:** காப்பியங்கள் | **Code:** 24PTAC23 |
| **Unit: 4 –** இரட்சணிய யாத்திரிகம் | |
| **Learning Objectives:** சிலப்பதிகாரம் தொடங்கித் தமிழில் தோன்றியுள்ள முதன்மையான காப்பியங்ககளைத் தெரிவு செய்தல். | |
| **Course Outcome:** கிறித்துவ இலக்கியத்தில் உள்ள இரட்சணிய யாத்திரிக காப்பியத்தின் மூலம் ஏசுவின் சிலுவைப்பாடுகளை அறிந்து கொள்ளல். | |

**Overview:**

குமர பருவம் - இரட்சண்யசரித படலம் - உய்யக்கொண்ட வரலாறு (50 பாடல்கள் முடிய), சிலுவைப்பாடுகள்

## இரட்சணிய யாத்திரிகம்

சாதாரண குடிமகன் ஒருவன் தன் பாவத்திலிருந்து விடுதலை பெற விரும்பி இரட்சிப்பினை நோக்கிச் செல்வதாகப் படைக்கப்பட்டுள்ளது. அறம் , பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் வீடுபேற்றைக் குறித்துப் பேசுவதாக இந்நூல் உள்ளது. இல்லறம், துறவறம் என்ற இரண்டினையும் சுட்டிக்காட்டி , வீடுபேறு சிறந்ததென முந்தைய காப்பியங்கள் பேச , இந்நூல் வீடுபேற்றைக் குறித்துப் பேசுவதாக அமைந்துள்ளது எனலாம்

**இரட்சணிய யாத்திரிகம்** 5 பருவங்களையும், 47 படலங்களையும் கொண்டுள்ளது. ஆதி பருவம் 19 படலங்களையும், குமாரபருவம் 4 படலங்களையும், நிதான பருவம் 11 படலங்களையும், ஆரணிய பருவம் 10 படலங்களையும் கொண்டுள்ளன. மொத்தம் 3622 பாடல்களையும் தேவாரம் என்னும் தலைப்பில் இறை வணக்கப் பகுதிகளையும் இந்த நூலில் காணலாம்.

எச்.ஏ.கிருட்டிணனார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு காப்பிய நூல் ஆகும் . ஆங்கிலேய எழுத்தாளர் ஜான்பன்யன் (John Bunyan) இயற்றிய 'புனிதப் பயணியின் முன்னேற்றம் ' என்ற நூலின் தமிழாக்கமான மோட்சப்பிரயாணம் என்னும் நூலைத் தழுவிச் செய்யுள் நடையில் எழுதப்பட்டதாகும். (The Pilgrim's Progress) தழுவல் ஆகும்.

கம்பராமாயண இலக்கியவழியிலும், தண்டியலங்கார இலக்கண வழியிலும் தமிழ் மரபுக்கேற்ப எழுதப்பட்டுள்ளது . இந்நூலில் பருவம் என்பது பெரும் பிரிவு, படலம் அப்பருவத்தினுள் அமையும் சிறுபிரிவு . இந்நூல் ஆதிபருவம், குமார பருவம் , நிதான பருவம் , ஆரணிய பருவம் இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையும் 47 படலங்களையும் உடையது . இந்நூல் 3622 பாடல்களையும், 144 இரட்சணிய யாத்திரிகத் தேவாரங்களையும் கொண்டுள்ளது.

இரட்சணிய யாத்திரிகத்தில் காப்பியத் தலைவன் கிருத்துவன் அல்லது ஆன்மீகன் ஆவான். அவனின் குரு

நற்செய்தியாளன், நண்பன் மென்னெஞ்சன் ஆவான். காப்பியத் தலைவன் மனம் தடுமாறும் போது அவனுக்கு உதவி சகாயம் செய்கிறான்.

இடுக்கவாயில் என்னுமிடத்தில் வியாக்கியானி என்பவனைச் சந்திக்கிறான். அவனது ஊக்க உரைகளால் உரம் பெறுகிறான் . நல்வழி நோக்கிச் செல்லுகின்ற பயணம், எளியதாக அமைவதில்லை துன்பங்களும் தொல்லைகளும் அடுக்கடுக்காக வந்து , நம்மை வழி தவறச் செய்யும். எனினும் அசையாத ஊக்கத்தோடு நாம் அப்புனிதப் பயணத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதை இதன் வாயிலாக உணர்கிறான் . தனது பயணத்தில் கிறிஸ்தவ குன்றினைக் கண்டு இறைவனைத் துதித்தபடி முன்னேறும் அவன் , இடையில் பயணிகள் இளைப்பாறும் ஒரு சத்திரத்தில் தங்கி ஒய்வு பெறுகிறான். அங்கு விவேகி, யூகி, பக்தி, சிநேகிதி என்னும் நான்கு நல்ல பெண்மணிகள் அவனை அன்புடன் உபசரிக்கின்றனர் . அவர்களுள் பக்தி என்பவள் , கிறிஸ்து பெருமானின் சிலுவைப்பாடுகளையும் அதனால் மனிதர் பெறும் மீட்சியின் (விடுதலையின்) அருமையையும் விளக்கிச் சொல்கிறாள்.

மீண்டும், பயணத்தில் நம்பிக்கை என்னும் இன்னொரு நண்பனின் துணையைப் பெறுகிறான். பற்பல துன்பங்களைத் தாண்டி இறுதியில் மரண ஆற்றையும் கடந்து, உச்சிதப் பட்டணம் சேருகின்றனர். அங்கு இவர்களை இறைத்தூதர்கள் வரவேற்கின்றனர் . இயேசு பெருமான் அரியணையில் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டு களிக்கின்றனர் . பின்னர் இருவரும் நீடு வாழ்வு பெறுகின்றனர் . ஆகவே தான் இந்நூல் இரட்சணிய யாத்திரிகம் , அதாவது மீட்சிப் பயணம் எனப் பெயர் பெற்றது . எனவே இந்த நூல் முற்று உருவகமாக அமைந்த பெருங்காப்பியம் ஆகும்

திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த “நற்போதகம்” எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது . பின்னர் 1894 - ஆம் ஆண்டு மே மாதம் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தாரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் என்பதன்

பொருள், கடவுளால் இரட்சிக்கப்படுவது குறித்து உயிர் செய்யும் யாத்திரை என்பதாகும்.

**இரட்சணிய சரிதப் படலம் சிலுவைப்பாடு**

யூதர்களும் சேவகர்களும் இயேசுநாதரைச் சொல்லாதன சொல்லி, எள்ளிப் புறக்கணித்தனர். அவற்றையெல்லாம் இயேசு பொறுத்துக் கொண்டார். பின்னர் செவ்வங்கியைக் முன் தரித்திருந்த ஆடையை அணிவித்துச் சிலுவையைச் சுமத்தித் தெருவழியே கொண்டு சென்றனர். சோர்ந்து, வருதித் தள்ளாடி கடந்து சென்ருர் இயேசு. அங்கிலேயிற் செல்லும் இயேசுவைக் கண்ட பெண்டிர், பிள்ளைகள், அனயோர் அசீனவரும் அழுது, புலம்பிப் பலவாறு அரற்றினர்; மரியன்னேயின் மனத் துயருக்கோர் அளவே இல்லை: இறுதியில் கொலை களத்திற்குக் கொண்டு சென்றனர். இடப் பக்கமும் வலப் பக்கமும் இரண்டு திருடர்களையும் இடையில் இயேசுவையும் சிலுவையில்வைத்து அறைந்தனர். அத்தகு பன்னரிய துயருறும்போதும் அருளாளராகிய இயேசு, இறைவா! அறியாமையாற் செய்யும் இவர் தம் பிழையை மன்னிக்கருவோர் என்று வேண்டிகின்றனர்.)

பொல்லாங்கனைத்தும் பொறுத்துக்கொள்ளல் பொல்லாத யூதர்களும் போர்ச்சேவகர் குழுவும் வல்லானை எள்ளி புறக்கணித்து வாய்மதமாய்ச் சொல்லாத சிந்தை மொழி சொல்லித் துணிந்தியற்றும் பொல்லாங்கை எல்லாம் ஈசன் பொறுத்திருந்தார்.

**தேவர் பிரான் சிலுவையைச் சுமத்தல்**

செவ்வங்கியைக் களைந்து முன்றரித்த அவ்வங்கியை தரித்தே ஆகடியம் பலபேசித் தெவ்வர் குழுமிச் சிலுவை தனைச்சுமத்திக் கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனுர், கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து வெய்ய சிலுவை சுமந்து மெய்வருந்தித் துய்ய திருவடிகள் சோர்ந்து நடை தள்ளாடி அய்யன் மறு கூடுவரக் கண்டார் அணிநகரார்.

**ஐயனைக் கண்ட நகரத்தார் புலம்பல்**

மாதருக்குளாசி பெற்ற மங்கை அன்னை மரி காதலனுக்கோ இக்கதி நேர்ந்த தென்றுமன வேதனைப்பட்டாற்ருது மெல்லியலார் தாங்குழுமி வீதி இருமருங்கு மொய்த்தார் வாய் விட்டழுது.

உலகமெல்லாம் படைத்துக் காப்பாற்றி , அங்குள்ள சகல மானிட ஜீவன்களும் மோட்ச கதியை யடைந்து சுகிக்குமாறு அவர்கள் பேரிலுள்ள அன்பினால் தன் குமாரனை பலியாகக் கொடுத்த மகிமை தங்கிய பிதாவாகிய கடவுளுக்கு மனதால் வணக்கம் செய்வோமாக.

உலகத்திலுள்ள மானிடர்கள் சநதோஷத்துடன் கடைத்தேறவும், மோட்சத்திலுள்ளவர் கட்டு ஆனந்த முண்டாகவும், சாத்தான் மனதில் பயமுண்டாகவும் , எங்கும் நிறைந்த கடவுளது அருள் வாக்குகள் தவறாது நிறைவேறவும் , பக்தர்கள் மனதில் ஸ்தோத்திர மதிகரிக்கவும் மனித அவதாரமெடுத்து அவர்கள் பேரிலுள்ள கருணையால் சிலுவை மரத்தில் ஏறிய மெயஞ்ஞான சூரியனாகிய இரட்சா பெருமானின் பாதங்களை வணங்குவோமாக.

துன்பத்திற்குக் காரணமானவைகளை நீக்கி , நல்லெண்ணமாகிய கனிகள் உண்டாகுமாறு , சன்மார்க்கத்தை உறுதியாக நாம் கைக்கொள்ள, இனிமையாக இறங்கி பக்தர்களுடைய இதயத்தில் வாசஞ் செய்யும் பரிசுத்தமாகிய நல்ல தேவாவியை எப்பொழுதும் வணங்குவோமாக.

மரங்களடர்ந்த சோலையில் ஓர் இரவில் தேவகுமாரன் தனியாக இருந்து , உலக முழுவதும் நற்கதியையடைய தான் உயிரைக் கொடுக்க வேண்டிவரும் ஸ்திதியை உணர்ந்து , வேர்வைத் துளியை இரத்தமாகச் சிந்தி கொடிய ஆத்தும வருத்தத்தையடைந்து பிதாவினிடம் அபயமிட்டதும், அக்கால் அவர் அடைந்த வேதனையும் என் மனதை விட்டு நீங்கமாட்டா.

அடர்ந்த முட்கள் நிறைந்த முடியை சிரசில் சூட்டப் பெற்றும் கோபமடையாது தாமரைப் புஷ்பத்தைப்போல் வாடாமலிருந்த அவர் முகமும் பேதுரு மனங்கசந்தழும்படி அவனை நேசத்துடன் பார்த்த நீண்ட கண்களும் , அழகு குன்றிப்போய் இரத்தமும் நீரும்

வடியப்பெற்ற பரிசுத்த சரீரமும் ஸ்ரீ இயேசுபிரானின் திருவடித்துணையும் என் மனத்தைவிட்டு நீங்கமாட்டா.

நான் பாவியென்று எனக்கு உணர்த்தியருளிய கருணையும், பாவநாசகராகிய இரட்சா பெருமானை எனக்குக் காட்டி என்னைத் தூண்டி அவரிடம் நடத்திக்கொண்டுபோகும் பெரிய திறமையும், எனக்காகப் பிதாவின்முன் ஓயாமல் மன்றாடுவதால் உண்டாகும் பெருமூச்சும், தேவ ஆவியின் பரிசுத்தஞ்செய்தலாகிய பெரிய கிரியைகளும் என் மனதைவிட்டு என்றும் நீங்கமாட்டா.

பக்தியென்னும் பெண் தேவலோக அரசனாகிய கடவுளைச் சந்தோஷத்துடன் மனதிலே பூசைசெய்து , பிரகாசமான பொன் கிண்ணியினின்று சர்க்கரைப்பாகு சொரியுந் தன்மைபோல இரக்ஷணிய சரிதத்தைக் கிறிஸ்தியானுக்கு பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

மாசற்ற மனதுடையீர் சிருஷ்டிக்கப்பட்டுள்ள மனிதர்கள் எல்லோரையும் பாவமாகிய அக்கினி போன்ற சிறையினின்று விடுவித்து, மேலேயுள்ள பரம உலகத்தில் அவர்களைச் சேர்க்கும் பொருட்டு, அரசனாகிய கடவுளது இளவரசிற்குரிய நம்பெருமான் பட்ட வாதைகளை யோசித்தால் அது பெரிதாகும்

தேவாமிர்தம் என்று சொல்லத்தகும் அந்த அற்புதமான விருந்தை சாப்பிடும் சமயத்தில், புண்ணிய புருஷனாகிய நம்பெருமான் ஞானம் நிறைந்த சில நற்போதனைகளைக் கேட்பவர் மனதிற் பதியும்படி சொன்னார்.

ஜெயதீசன் தம் இருதயத்தில் எழும்பிக்கொண்டிருக்கும் கருணையால் இவ்வுலகத்திற்குத் தம்மை யனுப்பினதையும் , தாம் அவதாரமெடுத்து வந்த அற்புதத்தையும் , கடவுளது மனதிலுள்ள ஆலோசனையை பூலோகத்திற்கு வெளிப்படுத்தினதையும்,

இதைச் செய் இதைச் செய்யாதே என்னும் விதி விலக்குப் பிரமாணமாகிய சுடரை ஆகாசத்தில் பொருந்தியிருக்கின்ற சந்திர ஜோதியைப்போல ஏற்றிவைத்த மாட்சிமையையும் , பரமகதிக்குக் கொண்டு செலுத்தக்கூடிய உண்மையான அன்பாகிய

கனிகளைத்தருகின்ற மெய் விசுவாசத்தின் மரமாகி வலிமையையும், ஞானசூரியனாம் நம்பெருமான கடவுளது நோக்கத்தை அநுசரித்தே சதா காலமும் நற்கருமங்களைத் தாம் செய்துவந்த சற்குணத்தையும் அன்பினாலே தெளிவாகச் சொல்லியபின் வேறு விஷயங்களைப் பற்றியும் உரைக்கிறார்.

'எல்லாம் வல்ல கடவுளாகிய திரித்துவ மூர்த்திகளுள் நான் ஒருவன். மூவரும் ஒன்றாக ( பிதாவும் நானும் பரிசுத்த ஆவியாராகிய) உள்ள வித்தியாசமற்ற தன்மையை நீங்கள் யாவரும் நம்பி என்னைவிட்டு விலகாதிருப்பீராயின் என்னில் தரித்திருப்பீர்.'

'பழமையான இப்பெரிய உலக முழுவதும் நீங்கள் சுற்றித் திரிந்து சுவிசேஷ சத்தியத்தைப் பிரசங்கியுங்கள் உலகம். அதனை யேற்றுக்கொள்ளும் பகைத்தாலும் பயப்படாதீர்கள், கடவுளது அருள் உங்களுக்குக் கிடைக்கும்.'

'நான் சொன்ன வார்த்தைகளை நீங்கள் மனதில் கொண்டு சன்மார்க்க நெறியையடைந்து, சத்தியத்தைச் சொல்லும் சாட்சியாக நீங்கள் நிலைபெறுவீர்களானால், பரிசுத்தமான அந்த பரம வீட்டையடைந்து என் ஆசனத்தின் பக்கத்தில் வந்துசேர்ந்து என்னுடன் விளங்குவீர்.'

'அன்பர்காள் !மாட்சிமை தங்கிய வானுலகத்தில் அநேக இடங்கள் உண்டு நான் அங்கே போய் சிறந்த இடத்தை . உங்களுக்காக ஆய்த்தம் செய்துவிட்டுத் திரும்ப வருவேன், மனங்கலங்காதீர்.'

அழிவற்ற மோட்ச உலகத்தைக் கொடுக்கும் உண்மையான வழியும் குற்றமற்ற சத்தியத்தின் மாட்சிமையும் ஒழிவற்ற நித்திய ஜீவனும் உண்மையாகச் சொல்லுமிடத்து என்னைத் தவிர வேறில்லை . இதையறிவீர்.

'நான் உங்களைவிட்டுப் பிரிந்துபோகுதலை நினைத்துக் கலங்குதல் சரியல்ல என் வார்த்தையை நீங்கள் சொந்தம் . பாராட்டி சிறந்த பக்தி செய்துகொண்டிருங்கள் உங்களுக்கு அருள். பெருகும்படி நான் போய் பரிசுத்த ஆவியை இங்குவந்து சேரும்படி யனுப்புவேன்.'

'என் பிதாவினது பரிசுத்த ஆவி இப்பெரிய உலகத்தில் வந்தால் , பாவம் நீதி நடுத்தீர்ப்பு முதலிய அன்பின் விஷயங்கள் தெளிவாக

விளங்குமாறு மெஞ்ஞானம் இன்னதுதானென்று உங்கள் உள்ளத்தில் நன்கு புலப்படும்

'நீங்கள் என் ஒப்பற்ற நாமத்தில் எதைக் கேட்டாலும் என் பிதா நீங்கள் கேட்டதைத் தந்து , எந்நாளும் உங்களைக் காப்பாற்றுவார் ' என்று நம்பொருமான் இவ்வாறான மாசற்ற வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கும் இரவு நேரத்தில்,

அவருடைய ஆத்துமாவில் அளவுகடந்த பாடுகள் மேலே திரண்டு ஒன்றாகச் சேர்ந்து நெருப்பின் சுவாலை மூடிக்கொள்வதுபோல அவரை நெருங்கிச் சூழ, பரிசுத்தமான நம்பெருமானது ஆவி கலங்கித் திகைத்தது.

குற்றமற்ற புண்ணிய புருஷோத்தமரான நம்பெருமான் பூலோகத்தில் வாழும் மானிடர்கள் இரட்சிப்படையும்படி மனவேதனையடைந்து, எல்லையில்லாப் பாவக்கடலைத் தாண்டும்படி செய்யாவிட்டால், நரகத்தால் வரும் அழியாத வேதனை அவர்களை விட்டு நீங்குமோ?

அரசனாகிய நம்பெருமான் இவ்விருந்துக்கு ஒத்த பஸ்கா பண்டிகையின் ஆட்டை யருந்தும் சீஷர்களது முகத்தைப் பார்த்து , 'இங்கேயிருக்கிற உங்களில் ஒருவனே என்னைப் பகைவர் கையில் ஒப்புக்கொடுப்பான்' என்று சொன்னார்.

அங்கே இவ்வாறு சொல்லக்கேட்ட மெய் அடியாராகிய சீஷர் தம்மில் யார் இத்தீங்கை நினைத்திருக்கிறான் என்று அறியக்கூடாதவர்களாய், தாங்க முடியாத வருத்தமும் பயமும் தங்களில் அதிகரிக்க , ஒருவரையொருவர் தனித்தனியாக விசாரித்தார்கள்

பேதுரு என்னும் சீஷன் , 'இங்குள்ளவர்களில் அப்பேர்ப்பட்ட துரோகி யார்?' என்று நம்பெருமானது மார்பில் சாய்ந்து கொண்டிருந்த அன்புள்ள சீஷனாகிய யோவானை மனவருத்தத்துடன் சைகைகாட்டி கேட்டான் யோவானும் "அது கண்ட . அவன் யார் சொல்லும் என நம்பெருமானை வேண்டினான்

பக்தர்கட்குச் சிறந்த அமுதத்திற்கொப்பான அழகிய வார்த்தைகளைப் பேசும் நம்பெருமான் உண்போருக்க இனிமையைத் தரக்கூடிய அப்பத்துண்டு ஒன்றைத் தம் கையால் எடுத்து , கடினமான

மனதையுடைய ஸ்காரியோத்து என்பவனுக்குக் கொடுத்து சொல்லி மறுபடியும்,

'என்னுடன் பாத்திரத்தில் கையிடுகிறவனாகிய அவனே என்னைப் பகைவரிடம் ஒப்புவிப்பான் .ஆதிகாலத்தில் என்னைப்பற்றி சொல்லியிருக்கிறவண்ணம் எனக்கு சம்பவிக்கும் . இதற்குப்பின் அவனுக்கு வரும் துன்பம் நாம் பேசுந்தன்மையுடையதோ?'

இவன் பிறந்திராவிட்டால் பெரிய நன்மையாக இருக்கும்' என்று பேதுரு முதலான தொண்டர்களுக்குச் சொன்னார் . ஒளிந்துகொண்டு பட்சிகளை வலைவைத்துப் பிடிக்கும் வேடனைக் காட்டிலும் அதிக வஞ்சத்தையுடைய இவன் இவ்வாறு நடக்கும் சமயத்தில்,

உடனே யூதாஸ் மனதிலிருந்து புறப்படும் மனச்சாட்சியை அடக்கி , வெட்கத்தை உதறிவிட்டு, நல்லறிவையும் இழந்து, நன்றியை மறந்து, கடினமான மனதுடன் மயங்கி, உம்மை ஒருவன் காட்டிக்கொடுப்பான் என 'நீர் பிரித்துச் சொன்னவன் நான்தானா?' என்று வாயினால் கேட்டான்.

நினைப்பார் நினைப்பனவற்றை உடன் உடனே அறியும் எம்பிரான் சந்நிதானத்தில் இருமனமுடையவனாக அவ்வாறு கேட்கத் துணிந்ததையறிந்த சத்தியமூர்த்தியானவர், 'நீ கேட்டது சரி ' யென்ற சொல்ல,

கொடியவனுடைய மனதிலிருந்த வஞ்சகம் விஷத்தைப்போல் வெளிப்படவே, அவன் மனம் வைரக்கல்லை விடக் கடினப் பட்டு அங்குண்டான நிந்தைக்குப் பயப்படாமல் பரிசுத்தமான கடவுளை விட்டு! ஐயையோ .போய்விட்டான் வெளியிலே

நாயுங்கூட தன் எஜமானன் தன்னைக் குத்தின வேல் தன் தேகத்தினுள் இருக்கும்போதே, அவ்வாறு தன்னைக் குத்தினது தன் எஜமானன் என்றறிந்தும் வாலை ஆட்டிக்கொண்டு அவனிடமே வந்துசேரும்அப்படியிருக்க ., சிறந்த பேரருளோடு கடவுள் செய்தவைகளுக்கேற்ற நன்றியை உணராமல் போய்விட்டான் . இவன் எப்பேர்ப் பட்டவனோ?

தன்னை இதுவரை காப்பாற்றிவந்த பரிசுத்த ஆவியை வெறுத்து , கொடிய சாத்தானுக்குத் தன் இருதயத்தைத் தானமாகக் கொடுப்பவர், கூத்தாடி கையில் அகப்பட்ட குரங்கைப்போல பிசாசுக்கள் தன்னையாட்ட தீய செயல்களைச் செய்ய அதின் பலனா ஆரம்பித்து கெட்டு நாசமடைவது உண்மையே.

கோபம் மிகுதியாயுள்ள யூதாஸ் என்னும் கள்ளனே 'நான் அண்டியிருந்து கெடுப்பேன் ' என்று சொல்லிய வஞ்சகமான எண்ணத்தை நிறைவேற்றுங்காலம் இதுவெனக் கண்டு , முன்னமே பணம் கொடுத்திருந்த அந்தப் பாதகரிடம் போய்ச் சேர்ந்தான் போலும்.

கெட்ட எண்ணமுடைய யூதாஸ் அவ்விடம் விட்டு நீங்கியபின், நம்பெருமான் தம்மைச் சூழ்ந்திருந்த அடியார்கட்கு அவர்கள் மேல் அதிகரித்துள்ள அன்பினால் சில நல்ல புத்திமதிகளைச் சொல்ல தம் மனதில் எண்ணங்கொண்டு, கடினமான அவர்கள் மனம் கரையுமாறு .சொல்லுவார் (பின்வருமாறு)

'மனுஷகுமாரனால் தேவன் மகிமையடைவதால் மிகவும் சீக்கிரத்தில் அம்மனுஷகுமாரனுக்கு மகிமையை அளிப்பார் . நான் இனி கொஞ்சக்காலந்தான் உங்களுடன் இருப்பேன் பின் என்னை . அன்போடு நாடித்தேடுவீர்கள்.'

'என் பிள்ளைகளே நான் போகுமிடத்திற்கு நீங்கள் ! வந்து சேரமுடியாது இப்பொழுது நீங்கள் மிகுந்த அன்புடையவர்களாய் . பிரகாசித்து நடப்பீர்களானால் நீங்கள் எனக்குகந்த சீஷர்கள் என்று உலகம் அறிந்துகொள்ளும்.' சீஷர்களை 'மக்களே' என்று அன்புடன் அழைக்கிறார்..

ஆகையினாலே நான் இங்கே உங்கள்பேரில் அன்பு பாராட்டினதுபோல, நீங்கள் ஒருவர்பேரில் ஒருவர் அன்புகூர்ந்து , குற்றமற்ற குணசாலிகளாக இங்கு நடந்துகொள்ளுங்கள் இதை . ஒப்பற்ற கற்பனையாக உங்களுக்குக் கொடுக்கிறேன்' என்றார்.

பேதுரு என்னும் தொண்டன் அவர்களை விட்டுப்) பிரிந்து போவதாக இரட்சா பெருமான் சொன்னது கேட்டு மனதிலெழுகின்ற அதிக வருத்தத்தினால் அவரை அணுகி, 'ஆண்டவரே நீர் எங்கே போகின்றீர்'

என்று கேட்க , அதற்கு அவர் :இதற்குப்பின் சில நாள் கழிந்தபின் என்னைப்பற்றித் தெரிந்துகொள்ளுவாய். இதையறிந்துகொள்' என்றார்.

அதைக் கேட்ட பேதுரு , 'நான் உமது பின்னே ஏன் வரமாட்டேன் . இன்று உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்' என்று தன்னுடைய பெலத்தை நம்பிப்பேச , வானவர்களுக்கு அரசனாகிய நம்பெருமான் அதைத் தடுத்துச் சொல்லுகிறார்:

'உன் உயிரை எனக்காக விட்டுவிடுவாயோ ? என்னிமித்தமாக பிசாசுக்கு இடம் கொடாமல் உன்னை நெருக்கியுள்ள சாத்தானைத்துரத்தி உன் விசுவாசம் நன்றாக உறுதிப்பட என் பிதாவிடம் நான் ஜெபித்தேன்' என்றார்.

ஆத்துமாக்களை ஈடேற்ற வெண்ணி இப்பூலோகத்திற்கு அவதார மெடுத்துவந்த நம்பெருமான் அவனை நோக்கி :'நீ பக்தியில் உறுதிப்பட்டதன்பின் உன் சகோதரர் பக்தியில் ஸ்திரப்படுமாறு நீ நினைப்பாய்' என பேதுருவின் விசுவாசம் இப்பூமியில் நிலைபெறச் சொல்லி முடித்தார்.

இதைக் கேட்ட பேதுரு தன் பலவீனத்தையறியாமல் , 'உம்முடன் சிறைச்சாலைக்கும் வருவேன் .மரணம் வந்தாலும் தலை கொடுப்பேன்' என்று மறுபடியும் சொல்லி , அவர்பேரிலுள்ள அன்பை வெளியிட்டான்இனி நடக்கப்போகிறவைகளை நினைக்கிறவர் யார் .?

இனி நடக்கவேண்டியவைகளை நினைத்தருளும் நம்பெருமான் : 'பேதுருவே, இன்றிரவில் சேவல் தெளிவாகக் கூவுமுன் நீ என்னை மூன்றுதரம் முழுதும் மறுதலிப்பாய் உனக்குச் சொன்னேன்' என்றார்.

இவ்வாற நடக்கும்பொழுது அங்கிருந்த சீஷர்களும் தமக்குத்தாமே உவமையாகும் இரட்சா பெருமானும் தம்முன் வைக்கப்பட்டுள்ள பஸ்கா ஆட்டை ஆதிவழக்கத்தின்படி புசித்து அதை முடித்தார்கள்.

பொங்குகின்ற மோட்ச இன்பத்தை நமக்கு அருள அவதாரம் எடுத்துவந்த மனுஷகுமாரனாகிய அவரே (செந்தாமரைப்போன்ற) சிவந்த கையினாலே அப்பத்தையேடுத்து அதைப் பிட்டு ஸ்தோத்திரம் செய்து சீஷர்களுக்குக் கொடுத்து உங்கள் நிமித்தம் மரணத்திற்கு ஒப்புவிக்கப்படும் என் சரீரம் இது என்னை .

நினைவுகூரும்படி இவ்வாறு இதைச் செய்துகொண்டிருங்கள்' என்று கருணையாகச் சொல்லி மறுபடியும்,

உருசியுள்ள திராட்சப்பழரசம் உள்ள பாத்திரத்தைக் கையில் எடுத்து அதை ஆசீர்வதித்து: நீங்கள் எல்லாரும் இதைப் பானம் பண்ணுங்கள் . இது என் புதிய உடம்படிக்கைக்காக சிந்தப் படும் என இரத்தமாக இருக்கிறது . பாவமன்னிப்பு இதனாலே உண்டாகும் .என் பிதாவின் இராஜ்ஜியமாகிய மோட்சவீட்டிற்கு நீங்கள் வந்து சேருமட்டும் இதை இனிமேல் நான் பானம்பண்ணுவதில்லை' என்றார்.

அன்பே உருவாக அவதார மெடுத்தருளிய ஸ்ரீ இயேசுபிரான் இவ்வாறு சொல்லி, பாவிகளுக்காக மனமிரங்கி தனக்கு ஒரே பேறான அருமைக்குமாரனை அனுப்பி இவ்வளவாய் இவ்வுலகத்தில் அன்பு கூர்ந்த கடவுனை அதிகம் நினைத்து , அவரைத் துதித்து , ஒரு தோத்திரப் பாட்டை தன்னுடனிருந்த சீஷர்களோடு இனிமையாகப் பாடினார்.

**Practice Questions:**

1. இரட்சணிய யாத்திரிகம் குறிப்பு வரைக.
2. யூதர்களின் கொடுஞ்செயலுக்கு இறைமகனார் இரங்கிய தன்மை யாது?
3. இறைமகனாருக்கு யூதர்கள் செய்த கொடுஞ்செயல்கள் யாவை ?
4. எச்.கிருட்டிணனார் குறிப்பு வரைக.
5. H.A.கிருட்டிணப்பிள்ளை இயற்றிய நூல்கள் குறித்து எழுதுக.
6. மனம் மாறிய கள்வன் இயேசுவிடம் வேண்டியது என்ன?
7. மெய்கிறித்துவர் யார் என்று H.A.கிருட்டிணப்பிள்ளை கூறுகிறார்?
8. இயேசு பிரான் அமைதியாகச் சிலுவை சுமந்து வந்த காட்சி பற்றி கூறுக.
9. சிலுவை சுமந்து வரும் இயேசுவை கண்டு மகளிர் புலம்பியது பற்றி குறிப்பிடுக.
10. இயேசு பிரான் இறுதி முடிவு குறித்து ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?

**Reference Books:**

1. புலவர். சே.சுந்தரராசன்

2. இரட்சண்ய யாத்திரிகம் - மாக்டா வீ. ஞானசிகாமணி. ஓர் ஆராய்ச்சி

**Webresources:**

www.tamilan1001.blogspot.com

www.nailango.blogspot.com

www.thirutamil.blogspot.com

www.vaalnilam.blogspot

www.arivumathi.blogspot.com